**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 144 of 2020** |
| Deposition of witness | : | **DW2** |
| Name | : | **செல்வரதி** |
| Husband Name | : | **ராஜேந்திரன்** |
| Age | : | **48** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30.10.2025.

<u>குறுக்கு விசாரணை</u>

1. அறக்கட்டளை சம்பந்தமான ஆவணங்கள் எங்கே இருக்கும் என்றால் சில ஆவணங்கள் பள்ளியிலும் சில ஆவணங்கள் வீட்டிலும் உள்ளது. நானும், ஒன்றாம் வாதியும், மூன்றாம் பிரதிவாதியும் விஜயகிரி வேலாயுதசாமி கல்வி அறக்கட்டளையில் உறுப்பினர்கள் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை நிறுவப்பட்ட சமயத்தில் 1ம் வாதி பாலகிருஷ்ணன் மேற்படி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் என்று சொன்னால் சரிதான். கடந்த 10.02.2016 ஆம் தேதி அன்று நானும், வாதி, மூன்றாம் பிரதிவாதி மற்றும் 11 நபர்கள் சேர்ந்து குன்னத்தூர் கூலான்குளத்தில் ஒரு ஏக்கர் 4 சென்ட் பூமியை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.2 ன் படி நானும், வாதி, மூன்றாம் பிரதிவாதி மற்றும் மற்ற சில நபர்கள் சேர்ந்து 18.02.2016 தேதியில் அறக்கட்டளையை தோற்றுவித்து பதிவு செய்தோம் என்றால் சரிதான். மேற்படி டிரஸ்ட் ஆவணத்தின் படி ஒன்றாம் வாதி நிறுவனர் மற்றும் தலைவராகவும், நான் செயலாளராகவும், மூன்றாம் பிரதிவாதி டிரஸ்ட் பொருளாளராகவும் பதவி நிலை குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ன் படி பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்படி அறக்கட்டளைக்கு 50 ஆண்டுகள் குத்தகைக்கு விடப்பட்டது என்றால்

சரிதான். நாங்கள் அறக்கட்டளையின் விதிகளுக்கு உட்பட்டு தான் செயல்பட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளையின் ஆவணமான வா.சா.ஆ.2 நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அறக்கட்டளையின் தலைவரை பதவியில் இருந்து நீக்க காரணங்கள் குறித்து கண்டுள்ளது என்றால் சரிதான். 24.05.2019 தீர்மானத்தில் என்ன காரணத்திற்காக ஒன்றாம் வாதி அறக்கட்டளை பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார் என்பதை குறித்தும், எந்த காரணத்தின் அடிப்படையில் ரங்கசாமி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதை பற்றியும் எந்த ஒரு குறிப்பும் தீர்மானத்தில் இல்லை என்றால் சரிதான்.

4. மூன்றாம் பிரதிவாதி கொடுத்ததாக சொல்லப்படும் ராஜினாமா கடிதத்தை மேற்படி தீர்மானத்துடன் இணைக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறக்கட்டளையின் துணை ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள மினிட்ஸ் புத்தகத்தின் நகல் உடைய அசல் எங்கு உள்ளது என்றால் எங்களிடம் தான் உள்ளது. 27.06.2018 ஆம் தேதி அன்று நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானத்தின் நகலையோ, மினிட்ஸ் புத்தகத்தையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மினிட்ஸ் புத்தகத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

5. வா.சா.ஆ.2 ன் படி நிர்வாக கமிட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு அமைக்கப்பட்டதா என்றால் அமைக்கப்பட்டது. அதில் அறக்கட்டளையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் தவிர, நிர்வாக உறுப்பினர்களாக இருந்தது யார் என்றால் கிருஷ்ணன் மற்றும் சுப்பிரமணி. அந்த நிர்வாக கமிட்டியின்

ஆயுட்காலம் என்பது மூன்று ஆண்டுகள் தான் என்றால் சரிதான். மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் இரண்டு இயக்குனர்கள் புதிதாக நியமிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். ஒவ்வொரு முறையும் அறக்கட்டளைக்கு புதிய இயக்குனர்கள் நியமிக்கும் போது பொதுக்கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி தான் நியமிக்க இயலும் என்றால் சரிதான். மேற்படி நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பது மினிட்ஸ் புத்தகத்தை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

6. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.7 ஒப்பந்தங்களின் விதிகள் மீறியது சம்பந்தமாக ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எதிர்வாதுரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நான் சொல்லி தட்டச்சு செய்யப்பட்ட விபரங்கள் என்றால் சரிதான். நான் அறக்கட்டளையின் செயலாளர் என்ற முறையில் தான் எதிர்வாதுரையில் கையொப்பம் செய்தேன், தனிப்பட்ட கோதாவில் செய்யவில்லை. ஆனால் தற்போது என்னிடம் காட்டப்படும் எதிர்வாதுரையில் எனது கையொப்பத்தின் கீழ் அறக்கட்டளையின் செயலாளர் என்ற சீல் இல்லை என்றால் சரிதான். 06.06.2019 என்று தேதி குறிப்பிட்டு அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான் .

7. மேற்படி எனது எதிர்வாதுரையில் 27.06.2018 தேதியிட்ட கூட்டத்தைப் பற்றியோ, தீர்மானத்தைப் பற்றியோ எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 24.05.2019 தேதியில் தான் அறக்கட்டளையின் துணையாவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு உறுப்பினரை நீக்க வேண்டும் என்றாலும் சேர்க்க வேண்டும் என்றாலும் பொது குழு கூட்டி தீர்மானம் போட்டு தான் செய்வோம் என்றால் சரிதான். ஆனால், வா.சா.ஆ.2 ஆவணத்தில் நிர்வாகக் குழு கூட்டம் 06.02.2019

தேதியில் நடைபெற்றதாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரங்களையும் எனது எதிர் வாதுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் மற்றும் கீர்த்தி கொடுத்ததாக சொல்லப்படும் கடிதத்திலும் பாலகிருஷ்ணன் தன்னை தலைவர் என்று குறிப்பிட்டு தான் 10.01.2019 தேதியில் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடிதம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் அவரே எழுதி நோட்டரி கையொப்பம் பெற்று எடுத்து வந்தார்.

8. வைரமணி எழுதிக் கொடுத்த ராஜினாமா கடிதத்திலும், ஒன்றாம் வாதி எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் ராஜினாமா கடிதத்திலும் சண்முகம் என்பவர் தான் நோட்டாரியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த நோட்டரி ஒப்பத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை நானும் மூன்றாம் பிரதிவாதையும் எங்களது தேவைக்கேற்ப அறக்கட்டளையின் ஆவணங்களை பயன்படுத்தி ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. மூன்றாம் பிரதிவாதி அவரது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் எனக்கு தெரிந்துதான் தாக்கல் செய்யப்பட்டது. அந்த ஆவணங்கள் மூன்றாம் பிரதிவாதி பொறுப்பில் என்னால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் இந்த விவரத்தை எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. பி.சா.ஆ.2 ஆவணத்திற்கு பின்னிட்டு பல உறுப்பினர்கள் அறக்கட்டையில் இருந்து வெளியேறி உள்ளனர் என்றாலும் சிலர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றாலும் சரிதான். ஆனால், அது சம்பந்தமாக துணையாவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை, மினிட்ஸ் புத்தகத்தில் குறிப்புகள் இருக்கும். 02.10.2016, 04.04.2017 பேதிகள்

அன்று மினிட்ஸ் புத்தகம் பாலகிருஷ்ணன் இருந்ததாக பி.சா.ஆ. 1 மற்றும் பி.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதி எந்த தேதியில் ராஜினாமா கடிதம் கொடுத்தார் என்பது மினிட்ஸ் புத்தகத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

10. அறக்கட்டளையின் கூட்டத்திற்கு வருகை பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறதா என்றால் ஞாபகம் இல்லை. 27.06. 2018 நடந்த கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அனைவருக்கும் முறையான அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அந்த அறிவிப்புகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. 06.02.2019 தேதியில் நடைபெற்ற கூட்டம் எத்தகைய கூட்டம் என்றால் பொதுக்கூட்டம். மேற்படி தேதியில் நடைபெற்ற கூட்டத்திற்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் முறையான அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அந்த அறிவிப்பையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நாங்கள் போன் மூலம் அறிவிப்பு கொடுத்தோம். 06.02.2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நானும் மூன்றாம் பிரதிவாதியும் தீர்மானம் எழுதிவிட்டு மற்ற உறுப்பினரிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டோம் என்றால் சரியல்ல. 06.02.2019 அன்று நடைபெற்ற கூட்டத்திற்கான அறிவிப்பு என்னால் செயலாளர் என்ற முறையில் அனுப்பப்பட்டது.

11. பாலகிருஷ்ணன் தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமாக ஏதேனும் கூட்டம் கூட்டப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை, மினிட்ஸ் புத்தகத்தை பார்த்தால் தான் தெரியும். இரண்டாம் பிரதிவாதி எனது கணவர் என்றால் சரிதான். இரண்டு மற்றும் மூன்றாம் பிரதிவாதிகள், திருமூர்த்தி ஆகியோர் வாதியை மிரட்டியதாக புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டு,

வந்த வழக்கில் அவர்கள் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றாலும், இதுவரையில் அதனை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் செய்யவில்லை.

12. பி.சா.ஆ.12 ஆவணத்தின் மூலம் DCB வங்கியில் கடன் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு கடன் பெறுவதற்கு ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி தீர்மானத்தை நகலை பி.சா.ஆ.12 ஆவணத்தில் இணைக்கவில்லை என்றால் சரிதான். 10.01.2019 தேதியிட்ட விடுதலைப் பத்திரம் ஒன்றாம் வாதியை மிரட்டி பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் பூமியை பொறுத்து மட்டுமே எழுதப்பட்டுள்ளது என்றாலும் அதில் அறக்கட்டளை சம்பந்தமாக எந்த ஒரு விடுதலையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 06.02.2019 தேதியில் நடைபெற்ற கூட்டத்தில் எத்தனை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் என்று குறிப்பிட்டு தீர்மானத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. பி.சா.ஆ.7 ஆவணத்தில் பி.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள தொகைக்கும், பி.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் உள்ளது என்றாலும், அதற்கான காரணம் என்ன என்றால் அது வட்டி கணக்கிட்டு குறிப்பிடப்பட்டுள்ள தொகை. வ.சா.ஆ.4 ஆவணம் மாலை 4:30 மணிக்கு சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதில் எனது கணவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வ.சா.ஆ.4 ஆவணம் எங்களது செல்வாக்கை பயன்படுத்தி விதிகளுக்கு அப்பாற்பட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஏற்கனவே எங்கள் வசம் உள்ள வாதியின் ஆதார் அட்டை

நகல்களை பயன்படுத்தி வாதி தாக்கல் செய்துள்ளது போல் வ.சா.ஆ.4 ஆவணம் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. பி.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். 27.06.2018 கூட்டத்தின் தீர்மான நகலை நீதிமன்றத்தில் இதுவரையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.01.2019 தேதி லோகநாதன் அல்லது கீர்த்தி, நான் சொல்வது போல் எந்த ஒரு ராஜினாமா கடிதத்தையும் தொடக்க வில்லை என்றால் சரியல்ல. 06.02.2019 அன்று நிர்வாக கூட்டம் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடைபெற்றதாக சங்கதிகள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு தயார் செய்யப்பட்டதால் தான் இந்த விவரங்கள் எதிர்வழ்க்குறையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

15. 04.04.2017 ஆம் தேதி ஒப்பந்தப்படி வாதிகள் செயல்படாத காரணத்தினால் அவர்களை அறக்கட்டளையில் இருந்து வெளியேறுமாறு, நானும், இரண்டு மற்றும் மூன்றாம் பிரதிவாதிகளும் வற்புறுத்தினோம் என்றால் சரியல்ல. வாதிகள் ஒப்பந்தம்படி நடந்து கொள்ள கால அவகாசம் கோரியபோது நாங்கள் அதனை மறுத்து அவர்களுக்கு இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. 27.06.2018 ஆம் தேதியிட்ட தீர்மானமும், 06.02.2019 ஆம் தேதியிட்ட தீர்மானமும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அறக்கட்டளையின் விதிகளுக்கு மாறாக செயல்பட்டதால் 1ம் வாதி எங்களுக்கு எதிராக கேள்வி கேட்டதால் நாங்கள் அவருக்கு இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் தொடர்ந்து இடையூறு செய்த காரணத்தினால் தான் வாதிகள் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி நடவடிக்கைகள் தொடர்புடைய மினிட்ஸ் புத்தகம் இதுவரையில்

எங்கள் பராமரிப்பில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எங்களுக்கு விரோதமாக விடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.10.30 18:49:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.